# ஆண்டாள் கோவில் சிறப்புகள்

ச. பிரபாகரன்,
*முனைவர் பட்ட ஆய்வாளர் – தமிழ்,*
*அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி.*

**முன்னுரை:**

இமயம் முதல் குமரி வரை பரந்து விரிந்துள்ள இந்த புனிதமான பாரத நாட்டில் உள்ள தமிழ்நாட்டில் எத்தனையோ சைவ ஆலயங்களும், வைணவ ஆலயங்களும் உள்ளன. 108 வைணவ திவ்ய தேசங்கள் என்று போற்றப்படும் வைணவ ஆலயங்களில் 84 ஆலயங்கள் தமிழ்நாட்டில் உள்ளது. அவற்றுள் ஒன்றான திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவில் சிறப்பினை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**ஆண்டாள் கோவில்:**

ஆண்டாள் கோவில் என்பது திருவில்லிபுத்தூரில் அமைந்துள்ள பழமையானதும், ஆழ்வார்களுள் பெரியாழ்வார் மற்றும் ஆண்டாள் அவதரித்த திருத்தலம் ஆகும். 108 திவ்யதேசங்களில் ஒன்றான இந்து மதக் கோவிலாகும்.

**கோவில் வரலாறு:**

திருவில்லிபுத்தூர் பகுதி வில்லி என்ற அரசனின் ஆட்சியில் இருந்தது. வில்லி காட்டைத் திருத்தி கோயில் எழுப்பி அழகிய நகரமைத்தான். இதனாலேயே வில்லிபுத்தூர் எனும் பெயர் பெற்றது. இவ்வில்லிபுத்தூரில் ஆண்டாள் அவதரித்தமையால் ‘திரு’ என்னும் அடைமொழியுடன் இவ்வூர் திருவில்லிபுத்தூர் என்றழைக்கப்படுகின்றது. திருவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்குக் கோயில் அமைந்துள்ளது. இக்கோயில் கி.பி. 739இல் கட்டப்பட்டிருக்கலாம் என்று ஸ்ரீவடபத்திரசயனார் கோயில் கற்பத்திரத்தில் இருக்கும் கல்வெட்டிலிருந்து தெரியவருகிறது. மேலும், கிருஷ்ணதேவராயர் திருவில்லிபுத்தூரில் 13 அடுக்குகளும் 192 அடி உயரமும் கொண்ட ராஜகோபுரத்தை வடபத்ரசயனார் பெருமாளுக்குக் கட்டியதாகத் தெரிகிறது. சைவர்களில் சிலர் திருவில்லிபுத்தூர் பெரிய பெருமாள் சன்னிதியில் கருப்பகிருகத்தின் கீழே உள்ள இடைவெளியில் சைவ சமய சன்னிதி ஒன்று இருந்திருக்கலாம் என்றும் அதை மறைப்பதற்காகவே மேல்தளமொன்றைக் கட்டி அதில் பெருமாளை பிரதிஷ்டை செய்துள்ளதாக வாதிடுவர். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இக்கோவிலுக்கு வருகை தந்த கம்பர் அங்கு பெருமாளை மட்டுமே தரிசித்ததாக கூறுகிறாரேயன்றி சிவன்கோயிலைப் பற்றி ஒன்றுமே கூறாமல் செல்கிறார். திருமலைநாயக்கர் மற்றும் இராணி மங்கம்மாள் ஆகியோர் தங்கள் ஆட்சிக்காலத்தில் இக்கோயிலில் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர்.

**திருவில்லிபுத்தூர் வேறு பெயர்கள்:**

திருவில்லிபுத்தூர் என்னும் ஊர் வராகசேத்திரம், வன்புதுவை, தன்விபுரம், திவ்யதேசம், ஸ்ரீவி, ஸ்ரீவில்லிபுத்தூர் என்று அழைக்கப்படுகின்றன.

**தமிழ்நாட்டின் அரசு முத்திரைச் சின்னம்:**

இந்தியாவில் 1956இல் மொழிவாரியாக மாநிலங்கள் அமைக்கப் பெற்ற போது தமிழ் பேசும் பகுதிகள் சென்னை மாகாணமாக உருப்பெற்றன. அந்தக் கால கட்டத்தில் சென்னை மாகாண முதல்வராக இருந்த

இராமசாமிச் செட்டியார் தலைமையிலான அரசு அரசாங்கச் சின்னமாக திருவில்லிபுத்தூர் கோபுரத்தைத் தேர்ந்தெடுத்தனர். மதச்சார்பற்ற நாட்டில் மதரீதியான இடங்களை முத்திரையில் வைக்கக் கூடாது. என்று கோரி 2013இல் கொடுத்த பொதுநல மனுவை சென்னை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தது.

**புராணச் செய்தி:**

திருவில்லிபுத்தூர் முன்னொரு காலத்தில் 'வராகதேசம்' என்று அழைக்கப்பெற்றது. திருவில்லிபுத்தூர் பகுதியை ராணி மல்லி என்பவரின் ஆட்சியின் கீழ் இருந்தது. இந்த ராணிக்கு வில்லி மற்றும் கண்டன் என்ற இரு மகன்கள் இருந்தனர். வில்லி, கண்டன் என்ற இரண்டு பேரும் ஒரு நாள் வேட்டையாடி வரும் போது கண்டன் புலி ஒன்றை துரத்திச் செல்கிறான். அவனைப் புலி கொன்று விடுகிறது. இதை அறிந்த வில்லி தன் தம்பியைத் தேடி அலைகின்றான். சோர்வடைந்து மரத்தடியில் தூங்குகிறான். அவன் கனவில் பெருமாள் தோன்றிக் கண்டனுக்கு நேர்ந்த நிலையைக் கூறுகிறார். பின்னர் தாம் இங்கு 'கால நேமி' என்ற அசுரனை வதம் செய்வதற்காக எழுந்தருளியதகவும், பின்னர் இந்த ஆலமரத்தடியில் உள்ள புதருக்குள் 'வடபத்ரசாயி' என்கிற திருநாமத்துடன் காட்சி அளிக்கப் போவதாகவும் கூறி இந்தக் காட்டை அழித்து நாடாக்கித் தமக்கு கோயில் எழுப்பி ஆராதனை செய்து வரும்படி கூறி மறைகிறார். இதனால் இந்த ஊருக்கு 'திருவில்லிபுத்தூர்' என்று பெயர் வந்தது என்று 'தல புராணம்' கூறுகிறது.

**மண்டபங்கள்**

**கல்யாண மண்டபம்**

**துவஜஸ்தம்ப மண்டபம்**

**ஏகாதசி மண்டபம்**

**மணி மண்டபம்**

**மகா மண்டபம்**

**அர்த்த மண்டபம்**

**மண்டபங்களில் காணப்படும் சிறப்புகள்**

**மண்டபங்களில் கல்யாண மண்டபம்,** துவஜஸ்தம்ப மண்டபம், ஏகாதசி மண்டபம் ஆகியன சிறப்பு வேலைப்பாடு மிகுந்தவை. ஒரே கல்லாலான பெரிய தூண் துவஜஸ்தம்பம் சிறப்பானதாக காணப்படுகிறது. உட் பிரகாரத்தில் தேக்குமர வேலைப்பாடுகளுடன் விளங்குகிறது. மணி மண்டபத்தில் கம்பம் ஒன்றில், ஆண்டாள் முகம் பார்த்த வெண்கலத்தட்டு (கண்ணாடி) காணப்படுகிறது. இதை 'தட்டொளி' என்பர். மகா மண்டபத்தில் தங்கமுலாம் பூசப்பெற்ற 'வெள்ளிக் கிழமை குறடு' என்ற மண்டபம் ஒன்று உள்ளது. இதன் தூண்களில் திருமலை நாயக்கர் மற்றும் அவரின் மனைவியர் இருவரின் சிலைகள் உள்ளன. அர்த்த மண்டபத்தில் தங்கமுலாம் பூசப்பெற்ற மஞ்சத்தில் இடக் கையில் கிளியை ஏந்தி நிற்கும் ஆண்டாளுடன் ரங்க மன்னார் திருக்கல்யாண கோலத்தில் எழுந்தருளியுள்ளார்.

**ஆண்டாள் வரலாறு:**

ஆண்டாள் தமிழகத்தில் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ ஆழ்வார்களுள் ஒருவர் ஆவார். வைணவம் போற்றும் 12 ஆழ்வார்களுளில் இவர் ஒருவரே பெண்ணாவார். ஆண்டாள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி, என்னும் இரண்டு பாடற் தொகுதிகளை இயற்றியுள்ளார். வைணவ சமய நூல்கள் கூறும் இவரது வரலாறு இறைவன் மீது இவர் கொண்டிருந்த காதலை விளக்கும் வித்தியாசமான ஒரு வரலாறாகும். ஆண்டாள் பூமிப் பிராட்டியின் அவதாரமாய் கருதப்பெறுகிறாள்.

**ஆண்டாளின் தோற்றமும் வாழ்வும்:**

ஒரு குழந்தையாக ஆண்டாள் ‘துளசிச் செடியின்’ கீழ் கிடந்த போது, திருவில்லிபுத்தூரில் வாழ்ந்த பெரியாழ்வார் என்னும் அந்தனர் ஒருவரால் கண்டெடுக்கப்படாள். ஆயர்குலப் பெருமை அறிந்த பெரியாழ்வார் அக்குழந்தைக்கு ‘கோதை’ என்று பெயரிட்டார். இளம் வயதிலேயே கண்ணன் மீது பக்தியுணர்வு கொண்டவளாகவும், அன்பு காரணமாகவும், அவரையே மணம் செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்தையும் வளர்த்துக் கொண்டார். இறைவனுக்கு அணிவிப்பதற்காக ஒவ்வொரு நாளும் தொடுத்து வைத்திருக்கும் மாலைகளைத் தான் அணிந்து மகிழ்ந்து பின்னர் அந்த மாலையை இறைவனுக்குக் சூட்டுவதற்காக வைத்தார். பெரியாழ்வார் இந்நிகழ்வினை கண்டு கோதையைக் கடிந்து கொண்டார். பின்பு புதிய மாலையைத் தொடுத்து இறைவனுக்கு அணிவித்தார். அன்றிரவு இறைவன் பெரியாழ்வார் கனவில் தோன்றி கோதை அணிந்த மாலையைத் தான் தனக்குச் சூட்ட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இதனாலேயே ‘சூடிக்கொடுத்த சுடர்க்கொடி’ என்று ஆண்டாள் போற்றப்பெற்றாள். மண வயதடைந்த பின்னர் திருவரங்கம் கோயிலில் குறித்த நாளன்று கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பெற்ற கோதை, கருவறைக்குள் சென்று இறைவனுடன் கலந்துவிட்டாள்.

**எண்ணெய்க்காப்பு:**

திருவில்லிபுத்தூர் திருக்கோயிலில் மார்கழி மாதம் ஆண்டாளின் எண்ணெய்க்காப்புக்கு 61 வகை மூலிகைகள் அடங்கிய 40 நாட்களில் காய்ச்சிய தைலம் பயன்படுத்தப்பெறுகின்றது. நல்லெண்ணெய், பசும்பால், நெல்லிக்காய், தாழம்பூ, இளநீர் முதலான பல பொருட்கள் சேர்த்து ஏழுபடி எண்ணெய் விட்டு இரண்டு பேர் நாற்பது நாட்கள் காய்ச்சுவர். இதில் நாலுபடி தைலம் கிடைக்கும். மார்கழி மாதத்தின் ஆண்டாள் எண்ணெய்க் காப்பு உற்சவத்தின் எட்டு நாட்களிலும் ஆண்டாளுக்கு இந்தத் தைலமே சாற்றப்படுகின்றது. மார்கழி மாதம் முடிந்த பின்னர் பக்தர்களுக்குப் பிரசாதமாக இந்தத் தைலப்பிரசாதம் தரப்படுகின்றது. பக்தர்களால் நோய் தீர்க்கும் மருந்தாக இந்தத் தைலம் நம்பப்படுகின்றது.

**தேரோட்ட உற்சவம்**

பதினெட்டு ஆண்டுகள் ஓடாதிருந்த ஆண்டாள் நாச்சியார் பெரிய தேர் பல நூற்றாண்டு பழமை வாய்ந்தது. கலைநயமிக்க பல மரச்சிற்பங்களும் ஒன்பது மரச் சக்கரங்களும் ஒன்பது மேலடுக்குச்சாரம், அலங்காரப் பதாகைகளும், அதன் உச்சியில் கும்பக்கலசமும் (ஐந்து பகுதி இணைக்கப்பட்டது), பட்டுக் கொடியும், ஒன்பது பெரிய வடமும் அமையபெற்றது. தேரோட்ட உற்சவத்தில் சுற்று வட்டார கிராமங்களுக்குக் கோபுரமும் திருத்தேரும் கம்பீரமாகக் காட்சியளிக்கும். பத்து மைல் தொலைவிலும் தேர் எந்த ரதவீதியில் உள்ளது என அறியாலாம். தேரோட்ட உற்சவத்தில் வடம்பிடித்து மக்கள் இழுக்க, நின்ற தேர் நகர மறுத்தால் தேரின் பின் சக்கரங்களில்

பெரிய கனமான மரத்தடியால் உந்தித் தள்ளுவர். எண்ணைய் தடவிய கனமான மரசறுக்குக் கட்டைகளால் தேரை நிறுத்தவும் பக்கவாட்டில் திருப்பவும் செய்வர்.

காலப்போக்கில் மரச்சக்கரங்கள் சேதமுற்றதால் மிகுதியான செலவு கருதி பதினெட்டு ஆண்டுகள் ஓடாதிருந்தது. மாற்றாக சிறிய தேர் பயன்பட்டது. மீண்டும் பெரிய தேரைச் சீரமைத்து இழுத்த போது அலங்கார மேலடுக்குச் சாரம், கலசம், சரிந்து கீழே விழுந்து பல உயிர்ப்பலிகள் நேர்ந்தன.

முன்பு வலிமை வாய்ந்த மக்கள் இத்தேரை நான்கு ரதவீதிகளில் சுற்றி நிலைக்கு வர மூன்று மாதங்கள் ஆகும். பாதுகாப்புக் கருதி அலங்கார மேலடுக்கு எண்ணிக்கையைக் குறைத்து இரும்பு அடிச்சட்டம், விசைத்தடையுடன் கூடிய நான்கு இரும்புச் சக்கரம் அமைத்து தேர் நவீனப்படுத்தப்பட்டது. தற்போது தேராட்ட உற்சவம் ஒரே நாளில் நடந்து முடிந்து விடுகிறது. (தேர் நிலைக்கு வர மூன்று மணி நேரம் ஆகும்)

**பாவை நோன்பு**

பெண்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாகத் திகழ்ந்தவள் ஆண்டாள். பெருமாள் மீது பக்தி கொண்டு அவரையே தன் கணவனாக அடைய விரும்பியவள். அவள் கண்ணனை மணக்க வேண்டி மார்கழி மாதத்தில் பாவை நோன்பு இருந்தாள். அவளுக்கு அருள் செய்த சுவாமி, பங்குனி உத்திரத்தில் திருமணம் செய்து கொண்டவர். ஆகவே பெண்கள் பாவை நோன்பு இருந்தால் விருப்பிய கணவன் கிடைப்பர் என்பது நம்பிக்கையாகும்.

மலையாளத்து திருவாதிரைத் திருவிழா தமிழ்நாட்டுப் புராதன வழக்கொன்றை பற்றியே நிகழ்வது. மார்கழி நீராடும்போது தண்ணீரில் பெரும் சப்தம் செய்து கொண்டு பெண்கள் மூழ்குவதை,

**“மெய்யார் தடப்பொய்கை புக்கு முகேரென்ன**

**கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி”**

எனவும்,

**“பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்**

**சங்கஞ் சிலம்பு கலந்தார்ப்பக்**

**கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்க**

**பங்கயப் பூம் புனலாமேலோ ரெம்பாவாய்”**

என்று கூறும் திருவெம்பாவையின் பாடலோடு ஒப்பிடலாம். மேற்சொன்ன திருவாதிரைத் திருநாளின் போது தற்போது நடைபெறும் வழக்கங்கள் திருப்பாவை காலத்திலேயே ஆண்டாளால் பின்பற்றப்பட்டது என்பது தெளிவு. மார்கழி மாதத்தில் நீராடல் முக்கியப் பங்கு வகிப்பதை கீழ்வரும் திரப்பாவை பாசுர வரிகளால் நன்கறியலாம்.

**“நீராடப் போதுவீர்”** **(திருப்பாவை: 1)**

**“நாட்காலை நீராடி”** **(திருப்பாவை: 2)**

**"நம் பாவைக்கு சாற்றி நீராடினால்"** (திருப்பாவை: 3)

**"நீராட மகிழ்ந்து"** (திருப்பாவை: 4)

**"குள்ளக் குளிர குளிர்ந்து நீராடாதே"** (திருப்பாவை: 13)

**முத்துப்பந்தல்**

ஆண்டாள் சன்னதியில் உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் மண்டபம் "முத்துப்பந்தல்" எனப்படுகிறது. இதில் வாழைமரம், மாவிலை மற்றும் பூச்செண்டு இருக்கிறது. மேலே திருமாலின் பாதம் இருக்கிறது.

**ஓம் வடிவ அம்சம்**

ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ள ஆண்டாள், ரெங்கமன்னார், பெரியாழ்வார் சன்னதிகள் ஓம் எனும் பிரணவ மந்திர அடிப்படையில் அமைந்துள்ளன. இதில் ரெங்கமன்னார் 'அ'கரமாகவும் ஆண்டாள் 'ம'கரமாகவும், கருடாழ்வார் 'உ'கரமாகவும் அமைந்து 'ஓம்' எனும் பிரவண மந்திரத்தின் பொருளாகத் திகழ்கின்றனர்.

**முப்புரி ஊட்டிய தலம்**

ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள், பெரியாழ்வார், வடபத்ரசாயி (சுயம்பு) ஆகிய மூன்று பேர் அவரித்த பெருமையுடையது. எனவே இத்தலத்தை 'முப்புரி ஊட்டிய தலம்' என்கிறனர். திவ்யதேசங்களில் புனிதமான தலமாகவும் கருதப்படுகிறது.

ஆண்டாளால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலங்கள்

ஆண்டாளால் மங்களாசாசனம் செய்யப்பட்ட தலங்கள், திருவரங்கம், திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, திருவில்லிபுத்தூர், திருவேங்கடம், துவாரகை, வடமதுரை, திருவாய்ப்பாடி, திருப்பாற்கடல் போன்ற தலங்கள் ஆகும்.

**முடிவுரை**

ஆண்டாள் கோவிலின் பழம் பெறுமைகளையும், கோவில் தோற்றம் கூறித்த வரலாற்றையும், ஆண்டாள் வரலாற்றுச் சிறப்புகளையும், மண்டபங்களின் சிறப்புகளையும், போன்ற சிறப்புக்களை விளக்குவதாக இக்கட்டுரை வழி அறியமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்:**

[1] ாவவிள:.˙..˙.நடு.றமைமனிநனயை.ழசப.˙.றமைம.˙.ளுசளைடைடனிரவாரசுயுனெயடவநஅிடந

[2] ாவவிள:.˙..˙.வயஅடை.யெவளைநிடயநெவ.உழஅ.˙.ளசளைடைடனிரவாரச.˙.யவவசயஉவழைளெ.˙.யனெயட-வநஅிடந.˙.

[3] ாவவிள:.˙..˙.வயஅடை.ழநெனைெயை.உழஅ.˙.யளவசழடழபல.˙.நெறள.˙.யயனைிழழசயஅ-கநளவளையட-ழெ-யயனெயட-வநஅிடந-ளசளைடைடனிரவாரச-326768.ாவஅட